**30.10.2025**
**MCOP.231/2023**
**<u>ம.சா.1. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

மனுவில் கண்ட மனுதாரர்களை தவிர இறந்த பழனிவேல் என்பவருக்கு வேறு வாரிசுகள் யாரும் இல்லை என்று சொன்னால் சரிதான். இந்த விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. நான் இந்த விபத்து குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் விபத்து சம்பந்தமாக சொல்லியுள்ள விவரங்கள் நேரடியாக தெரியாது என்றும், கேள்விபட்டு தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது கணவரின் வயது, வருமானம் குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. முருகப்பா என்பவர் வண்டி ஓட்டிச்சென்றதால் எனது கணவர் பின்புறத்தில் உட்கார்ந்து கொண்டு பயணம் செய்தபோது முருகப்பாவின் அஜாக்கிரதையினால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.3 ஆவணத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு ஏற்படும் சேதத்திற்கான காப்பீடு மட்டும் தான் நிலுவையில் உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ம.சா.ஆ.3 ஆவணத்தில் 3ம் தரப்பினருக்கு விபத்து ஏற்பட்டால் அதற்கு HDFC Ergo காப்பீடு நிறுவனம் தான் பொறுப்பு என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கு தேவையான

தரப்பினரான HDFC Ergo காப்பீடு நிறுவனத்தை சேர்த்து அவரிடம் இருந்து தான் நஷ்ட ஈடு தொகை பெற வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்கு தேவையான தரப்பினர்களை சேர்க்காததால் எனது மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :- இல்லை .**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.